மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

அ.வ.எண்.27/2015 C/W OS.No.122/2015

| | | | |
|---|---|---|---|
| பெயர் | M.S.கார்த்திகேயன் | தொழில் | |
| தகப்பனார் பெயர் | சண்முகம் | வகுப்பு | |
| வயது | | சமயம் | இந்து |
| நாள் | 01.12.2023 | கிராமம் | |
| சாட்சி | வா.சா.2 | | |

இன்று 01.12.2023 ஆம் தேதியன்று சாட்சி இந்நீதிமன்றம் வரவழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டார்.

முதல் விசாரணை

1) தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 உயில் சாசனத்தை நான் தான் தயாரித்தேன் என்றால் சரிதான். மேற்படி உயில் ஆவணம் கடந்த 01.09.2008ம் தேதியில் எழுதப்பட்டது என்றால் சரிதான். மேற்படி உயில் ஆவணம் தயாரிக்கப்பட்ட தேதியில் நான் ஓமலூர் நீதிமன்றத்தில் வழக்கறிஞராக பணியாற்றினேன் என்றால் சரிதான். தற்போது ஓமலூர் சார்பு நீதிமன்றத்தில் அரசு வழக்கறிஞராக உள்ளேன்.

2) மேற்படி உயில் ஆவணத்தை நிறைவேற்றம் செய்த பெரியண்ணன் மகன் சண்முகம் என்பவர் எனக்கு ஏற்கனவே அறிமுகம் ஆனவரா என்றால், மற்றொரு நபரின் மூலம் அறிமுகமானவர். மேற்படி உயில் ஆவணத்தை தயாரிக்க சண்முகம் என்னென்ன ஆவணங்களை என்னிடம் சமர்பித்தார் என்றால், அவர் பெயரிலுள்ள பட்டாவை மட்டும் சமர்பித்தார்.

3) மேற்படி உயிலில் சாட்சி கையெழுத்திட்டுள்ள 2 சாட்சிகளையும் யார் அழைத்து வந்தது என்றால், சண்முகம்தான் அழைத்து வந்தார். மேற்படி உயில் ஆவணத்தில் கண்டுள்ள வாசகங்களை யார் எனக்கு சொன்னார்கள் என்றால், மேற்படி சண்முகம் அவரது சுய புத்தியிலிருந்து எனக்கு சொன்னார். மேற்படி உயில் ஆவணத்தில் கண்டுள்ள வாசகங்கள் குறித்து சண்முகத்திற்கும், சாட்சிகளுக்கும் நான் தெளிவாக படித்து கூறினேன். பின்னிட்டு சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று சார்பதிவாளர்

அதை தெளிவுபடுத்தியபின்பு தான் அவர்கள் உயில் ஆவணத்தில் கையெழுத்திட்டனர். அதில் சண்முகம் கைரேகை வைத்தார். சாட்சிகள் கையெழுத்து செய்தனர்.

4) மேற்படி உயில் ஆவணத்தில் சாட்சி கையெழுத்திட்டுள்ள ராஜகோபால் இறந்துவிட்டார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. 2ம் சாட்சிக்கு விபத்து ஏற்பட்டு அவர் படுத்த படுக்கையாக உள்ளார் என்றால், அது குறித்து எனக்கு தெரியாது. மேற்படி உயில் ஆவணத்தை தயாரித்தவர் என்ற அடிப்படையில்தான் நான் தற்போது சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரப்பட்டதால் தற்போது நான் சாட்சியம் அளிக்கிறேன்.

(பிரதிவாதிகள் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க வா.சா.2 ன் குறுக்கு விசாரணவேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.